திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் மாங்கனி, தக்காளி, புளி போன்ற நல்ல பொருட்கள் அதிகமாக விளைந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலில் கூறுகின்றபோது, 7 குளிர்பதனச் சேமிப்புக் கிடங்குகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவை, தனியார் குளிர் பதனக் கிடங்குகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவற்றிலே அந்தப் பொருட்களை வைத்துப் பதப்படுத்துகிறபோது, அவை தனியாருடையவையாக இருக்கின்ற காரணத்தால், வாடகையை அதிகமாகப் பெறுகிறார்கள். ஆகவே சில நேரங்களில் மழை பெய்கிறபோது எங்களுடைய மாவட்டத்தில் தக்காளி போன்ற பயிர்களையெல்லாம் விவசாயிகள் ஒரே நேரத்தில் பயிரிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே தக்காளி, புளி, மாங்கனி போன்ற பொருட்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்த செலவிலே இருக்கவேண்டுமென்று சொன்னால், நம்முடைய அரசாங்கத்தின் மூலமாகவே அங்கே தேசிய குளிர்பதனக் கிடங்கு ஒன்றை ஏற்படுத்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தக்கவாறு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 43 பிறகு எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 44, திரு. அ. நடராஜன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

44—

குழந்தைகள் நல மையம்

***16366—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2006 ஜனவரி 19]

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சியில் குழந்தைகள் நல மையம் அமைத்துத்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சி, சேங்காலிபுரத்தில் அங்கன்வாடி மையம் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெற்ற குழந்தைகளைக் குப்பைத் தொட்டியில் வீசும் தாய்மார்களின் அவல நிலை நீங்க, தொட்டில் குழந்தை திட்டம் தந்து உலகமே வியக்கின்றவகையில், அன்னை தெரசாவால் பாராட்டப்பெற்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், என்னுடைய தொகுதியில், சேங்காலிபுரத்தில் குழந்தைகள் நல மையம் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து, அதோடு தரமான கல்வியும், ஊட்டச் சத்தும் பாதுகாப்பும் தருகின்றவகையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் நல்ல பல காரியங்களைச் செய்து சமூகப் புரட்சி செய்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், எனது குத்தாலம் ஒன்றியம், கோனேரிராஜபுரம் ஊராட்சியில் உள்ள பொய்கைவளர்நத்தம், ஈச்சங்குடி ஆகிய பகுதிகளை ஒருங்கிணைத்து புதிய குழந்தைகள் நல மையம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குழந்தைகள் நல மையம் ஆரம்பிப்பது என்றால், மொத்தம் ஆயிரம் நபர்கள் வாழக்கூடிய இடத்தில் ஒரு புதிய மையம் தொடங்கலாம். அதேசமயம் 500 பேர்கள் வாழக்கூடிய இடத்தில் ஒரு மினி மையம் தொடங்க வாய்ப்பு உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடங்களில் அவ்வாறு வாய்ப்புகள் இருந்தால், நிச்சயம் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதனையும், பரிசீலிக்கும் என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2006 ஜனவரி 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 45, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

45—

பணி ஒய்வுப் பலன்கள்

***11668—திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், தொழில் வணிகத் துறை தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் விருப்பப் பணி ஒய்வு பெற்றுள்ள அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு அதற்கான பலன்களை உடன் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழில் வணிகத் துறையின்கீழ் செயல்பட்டுவரும், தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் பணியாற்றி விருப்பப் பணி ஒய்வு பெற விண்ணப்பம் அளித்துள்ள அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அரசு ஊழியர்கள் இல்லாததால், அவர்களுக்குச் சேர வேண்டிய பலன்களை அந்தந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டே, கூட்டுறவுச் சங்க சட்ட விதிகளுக்கு உட்பட்டு வழங்க இயலும். அதற்கான பலன்களை அரசே ஏற்று அளிக்க இயலாது.

திருமதி எ.எஸ். மஹேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் ஆண்டிலே நான் கேட்ட கேள்வி, இறுதி ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் கேட்டிருப்பது, ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு முன்பு 'இன்கோ'விலே நடந்த நிகழ்வு. அப்போது 'இன்கோ' தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், அதிலும் குறிப்பாக நலிவுற்ற தேயிலைத் தொழிற்சாலைகளிலே man power complement என்பது மிக அதிகமாக இருந்த காரணத்தினால் ஆட்குறைப்புச் செய்ய வேண்டுமென்று அரசு திட்டமிட்டது. அதன் அடிப்படையிலே நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும், பணியாளர்களும் VRS என்கின்ற பேரிலே CRS அளிக்கப்பட்டார்கள். அதாவது விருப்ப ஓய்வு என்கின்ற அடிப்படையிலே, கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டார்கள். அவ்வாறு